# கரூர் நகராட்சி
# கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு செப்டம்பர் 13ம் நாள் திங்கட்கிழமை மாலை 4.25மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திரு.சு.இராமமூர்த்தி அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் நகராட்சி வார்டு எண்.36 ராஜா நகர் மற்றும் காமதேனு நகர், பகுதிகளுக்கு 110mm PVC குடிநீர் குழாய் சேதமடைந்துள்ளதை மாற்றி அமைக்கவும், வார்டு எண்.34 எஸ்.வெள்ளாளப்பட்டி குடிநீர் மேல்நிலை தொட்டியின் out let குடிநீர் குழாய் இணைப்பு பணிக்கு முதன்முறையாக 20.07.2021 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.40லட்சம்</u>

1. CVM & Co, Karur மதிப்பீட்டை விட 0.31% சதம் குறைவு
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 1.32 % சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.258, நாள். 31.05.2021 ம் தேதி ரூ.1.40 இலட்சத்தில் குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள CVM & Co, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ2/5526 /2021)

தீர்மானம் எண். 443 அனுமதிக்கப்பட்டது.

2) கரூர் நகராட்சிக்குட்பட்ட கே.வி.பி நீருந்து நிலையத்தில் உள்ள மண்ணை அகற்றும் பணிக்கு முதன்முறையாக 24.03.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.0.30லட்சம்</u>

1. Sri.KrishnaTraders, Karur மதிப்பீட்டை விட 0.26% சதம் குறைவு
2. Sree Builders, Karur மதிப்பீட்டை விட 0.65 % சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 61, நாள். 29.01.2021ம் தேதி ரூ.0.30 இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Sri.KrishnaTraders, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ2/ /2021

‘

தீர்மானம் எண். 444 அனுமதிக்கப்பட்டது.

3) கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம் கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும்

பஸ்பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

மேலும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021– 2022–ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.9ல் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பொதுமக்களின் நலனுக்காகவும், குறிப்பாக சிறுவர்களுக்காகவும் ரூ.3096 விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளன. நடப்பாண்டில் 552 பூங்காக்கள் ரூ.122 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20028/2021/தி2 நாள்.08.09.2021ல் மாநகராட்சி/ நகராட்சிகளில் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்துவது தொடர்பாக விரிவான திட்ட கருத்துருவினை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கரூர் நகராட்சிக்கு உட்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி குடியிருப்பு வாரியம் தாந்தோணி பகுதி மற்றும் மாவட்ட ஆட்சியர் வளாகம் ஆகிய பகுதிகளில் நகர மக்கள் பயன்பெறும் வகையில் பூங்காக்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.77கோடிக்கு விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட கருத்துருவிற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம். (இ1/8427/2021)

தீர்மானம் எண். 445 அனுமதிக்கப்பட்டது.

4) கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந் நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம் கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ்பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

மேலும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021– 2022–ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத்துறையின் மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்15–ல் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.100கோடி மதிப்பீட்டில் 50 நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20027/2021/தி2 நாள்.08.09.2021ல் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.100கோடி மதிப்பீட்டில் 50 நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைப்பதற்கு விரிவான திட்ட கருத்துருவினை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கரூர் நகராட்சிக்கு சொந்தமான பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், நில அளவை எண்.1019/1ல் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளதாலும், பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளதாலும், எளிதில் இங்கு அமைக்கப்பட உள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை அணுகலாம்.

எனவே, போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக கரூர் நகராட்சிக்கு சொந்தமான பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், நில அளவை எண்.1019/1ல் அறிவுசார் மையம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.250.00லட்சத்திற்கு விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட கருத்துருவிற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/8426/2021)

தீர்மானம் எண். 446 அனுமதிக்கப்பட்டது.

5) கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம் கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

மேலும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021– 2022–ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.14–ல் உள்ளாட்சி அமைப்புகளில் புதிதாக 20 மார்க்கெட்டுகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் உருவாக்குவதுடன் ஏற்கனவே திண்டுக்கல், ஒசூர் மாநகராட்சிகள் , வாணியம்பாடி , குமாரபாளையம், ராசிபுரம், கரூர், காஞ்சிபுரம், தாம்பரம், சிதம்பரம், மேலூர், கொடைக்கானல், வெள்ளகோவில் , சத்தியமங்கலம், புஞ்சை புளியம்பட்டி , உதகமண்டலம், செங்கோட்டை, பத்மநாபபுரம், குழித்துறை , நாகப்பட்டிணம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய நகராட்சிகளில் செயல்பட்டு வரும் 20 மார்க்கெட்டுகள் ரூ.65கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21326/2021/தி2 நாள்.09.09.2021ல் மாநகராட்சி / நகராட்சியில் மேம்படுத்தப்பட வேண்டிய மார்க்கெட்டுகளின் கருத்துருவினை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கரூர் நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் மார்க்கெட்டில் 184 கடைகள் உள்ளன. இந்த கடைகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இதனை முற்றிலும் அகற்றி விட்டு நவீன வசதிகளுடன், குளிர்பதன கிடங்கு வசதிகளுடனும் உள்ளடக்கி புதிய மார்க்கெட் வளாகம் கட்டுவதற்கு ரூ.31.54கோடிக்கு விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட கருத்துருவிற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/7348/2021)

தீர்மானம் எண். 447 அனுமதிக்கப்பட்டது.

6) கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந் நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம் கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

கரூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள ஏழை ,எளிய பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இனாம் கரூர், கோதுார் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒரு பல்நோக்கு மண்டபமும், தாந்தோணி பகுதியில் பழைய காவல் கணிகாணிப்பாளர் அலுவலக வளாகத்தில் ஒரு பல்நோக்கு மண்டபமும் ஆக மொத்தம் இரண்டு இடங்களில் பல்நோக்கு மண்டபம் கட்டப்பட வேண்டும் என்று மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கரூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள ஏழை ,எளிய பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இனாம் கரூர், கோதுார் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒரு பல்நோக்கு மண்டபமும், தாந்தோணி பகுதியில் பழைய காவல் கணிகாணிப்பாளர் அலுவலக வளாகத்தில் ஒரு பல்நோக்கு மண்டபமும் ஆக மொத்தம் இரண்டு இடங்களில் பல்நோக்கு மண்டபம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.49.94 கோடிக்கு விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட கருத்துருவிற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 448 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி

# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு செப்டம்பர் 15ம் நாள் புதன்கிழமை மாலை 4.55மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திரு.சு.இராமமூர்த்தி அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை அறிவிப்பு நாள்.24.08.2021ன்படி தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும் தரம் உயர்த்திட தற்போது உள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளை சுற்றியுள்ள பகுதிகளில் நகர்ப்புறதன்மை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புறமாக மாறிவருகின்ற பகுதிகளை நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும், உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படும் என்பதற்கிணங்க கரூர் நகராட்சியிணை சுற்றி வளர்ச்சி அடைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒன்றிணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அரசு கூடுதல் தலைமை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்களின் 26.08.2021ஆம் தேதிய காணொலி காட்சி அறிவுரைகளில் கிராம ஊராட்சிகளை, கரூர் நகராட்சியுடன் இணைத்து கரூர் மாநகராட்சியாக தரம் உயர்த்த இசைவு தெரிவித்து உரிய நகர்மன்றத்தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. கரூர் நகராட்சியை ஒட்டியுள்ள 6கிராம ஊராட்சிகளை, கரூர் நகராட்சியுடன் இணைத்து மாநகராட்சியாக தரம்உயர்த்துவதால் மத்திய மற்றும் மாநில அரசுகள் அறிவிக்கும் திட்டங்களின் கீழ் சாலைகள், பாதாள சாக்கடை, குடிநீர் திட்டம், மழைநீரிணை முறையாக வெளியேற்றுவதற்கான ஒருங்கிணைந்த மழைநீர் கால்வாய் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத்திட்டம், மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த வாய்ப்பு உள்ளதால் இப்பகுதிகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதார தரம் உயரும். எனவே ஆண்டாங்கோவில் கிழக்கு கிராம ஊராட்சி, காதப்பாறை கிராம ஊராட்சி, மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி கிராம ஊராட்சி, கருப்பம்பாளையம் கிராம ஊராட்சியில் திருமாநிலையூர் பகுதி மட்டும், ஆண்டாங்கோவில் மேற்கு கிராம ஊராட்சி, ஆத்தூர் பூலாம்பாளையம் கிராம ஊராட்சி, ஆகிய 6கிராம ஊராட்சிகளை கரூர் நகராட்சியுடன் இணைத்து கரூர் மாநகராட்சியாக தரம் உயர்த்த இசைவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :– கரூர் நகராட்சி 53.26சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதும் 2,46,574 மக்கட்தொகை கொண்ட பெருநகராட்சியாக இயங்கி வருகிறது. தற்போது இந்நகரத்தை சுற்றியுள்ள ஆண்டாங்கோவில் கிழக்கு கிராம ஊராட்சி, காதப்பாறை கிராம ஊராட்சி, மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி கிராம ஊராட்சி, கருப்பம்பாளையம் கிராம ஊராட்சியில் திருமாநிலையூர் பகுதி மட்டும், ஆண்டாங்கோவில் மேற்கு கிராம ஊராட்சி, ஆத்தூர் பூலாம்பாளையம் கிராம ஊராட்சி, ஆகிய 6கிராம ஊராட்சிகளையும் கரூர் நகராட்சியுடன் இணைத்து 124.83 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட கரூர் மாநகராட்சியாக தரம் உயர்த்த 1920 வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 4ன்படி அரசை கேட்டுக்கொள்ள மன்றம் இசைவு வழங்கலாம். (எப்1/9993/2014)

தீர்மானம் எண். 450 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம் கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021– 2022–ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.16–ல் பேரூராட்சிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன மயமாக்கப்பட்ட 10 பேருந்து நிலையங்கள் ரூ. 60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். திருமங்கலம், நாமக்கல், தர்மபுரி, திருத்தணி, திருவண்ணாமலை, திண்டிவனம், மயிலாடுதுறை, கரூர், காஞ்சிபுரம் ஆகிய நகராட்சிகளில் அரசு மான்யம், பொதுமக்கள் பங்களிப்பு மூலமாக பல்வேறு பேருந்து நிலையங்கள்

செயல்படுத்த ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டு செயல்படுத்தப்படாமல் உள்ளது. தற்போது மேற்கூறிய நகராட்சிகளில் பல்வேறு நிதிகளை ஒருங்கிணைத்து புதிய நவீன பேருந்து நிலையங்கள் கட்டப்படும். மேலும் கடலூர், மன்னார்குடி, ராணிப்பேட்டை, சங்கரன் கோவில் நகராட்சிகளிலும் மற்றும் ஈரோடு மாநகராட்சிகளிலும் புதிய பேருந்து நிலையங்கள் கட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கரூர் நகராட்சிக்குட்பட்ட திருமாநிலையூர் கிராமம் கருப்பம் பாளையம் ஊராட்சி சர்வே எண்கள் 95/2, 97/2, 98/1, 113/1, 114/ஏ2 ,115/1பி ,116/2, 117/1, 118, 119, 120, 121, 122, 123/1, 146ஏ1, 148/1, 149, 150/1, 151/1, 152/1பி, 243/2 , 246/2, 247/2 மற்றும் 248/2–ல் கட்டப்பட்ட 12.14 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் ரூ.62.50 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட கருத்துருவிற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/8560/2021)

தீர்மானம் எண். 451 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம் கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021– 2022–ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.10–ல் மாநகராட்சி, நகராட்சிகளில் 400 கிலோ மீட்டர் மண் சாலைகள் ரூ. 300 கோடி மதிப்பீட்டிலும், பேரூராட்சிகளில் 500 கிலோ மீட்டர் மண் சாலைகள் ரூ. 325 கோடி மதிப்பீட்டிலும் நிதி நிலை அறிக்கையில் அறிவித்த வண்ணம் மண் சாலைகளை , தார்சாலை , சிமெண்ட் சாலை, பேவர் பிளாக் சாலைகளாக தரம் உயர்த்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 48 வரையிலான பகுதியில் ' மண்சாலையை தார்சாலையாக மாற்றி அமைக்கும் பணிக்கும், மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.561.11 இலட்சத்திற்கு விரிவான திட்ட கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட கருத்துருவிற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/8559/2021)

தீர்மானம் எண். 452 அனுமதிக்கப்பட்டது.

4)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம் கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021– 2022–ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.11–ல் இயற்கை இடர்பாடுகள் மற்றும் ஏனைய காரணங்களால் பழுதடைந்த தார்சாலைகள் மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் 500 கிலோ மீட்டர் சாலைகள் ரூ. 250 கோடி மதிப்பீட்டில், மற்றும்

157 பேரூராட்சிகளில் 292 கிலோ மீட்டர் நீளமுள்ள 194 சாலைகள் மற்றும் 11 பாலங்கள்ரூ. 201 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 48 வரையிலான பகுதிகளில் இயற்கை இடர்பாடுகள் மற்றும் ஏனைய காரணங்களால் பழுதடைந்த சாலைகளை 68.811 கி.மீ நீளத்தில் புதிய தார்சாலைகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ.3911.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட கருத்துருவிற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/8558/2021)

தீர்மானம் எண். 453 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்புநிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம்கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ., பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும்.

கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 முதல் 36வரையிலான சணப்பிரட்டி பகுதிக்கு காவேரி ஆற்றில் கட்டளை என்னுமிடத்தில் 2004ம் ஆண்டு அமைக்கப்பட்ட தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்து மூலக்காட்டானூர் நீருந்து நிலையம் முலமாக அப்பகுதியில் அமைந்துள்ள 13 நீர்த்தேக்க தொட்டியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குறைந்த கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் சிறிய விட்டமுள்ள குழாய்கள் ஏற்கனவே ஊராட்சியாக இருந்த போது அமைக்கப்பட்டு உள்ளது. தற்போது விரிவாக்கம் அடைந்து வரும் பகுதியாக உள்ளதால் கூடுதல் நீர் ஆதாரம் ஏற்படுத்தவும், சணப்பிரட்டி பகுதியில் கரூர் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரி அமைக்கப்பட்டுள்ளதால் மருத்துவக்கல்லூரிக்கு தினசரி 1.50 MLD தேவைப்படுவதாலும், சணப்பிரட்டி பகுதிக்கு கூடுதல் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை செயல்படுத்த TNUIFSL நிறுவனத்தின் மூலம் தனியார் ஆலோசகர் நிறுவனமான M/S.VITYA CONSULTANCY PVT LTD., Secundrabad அவர்கள் மூலம் விரிவான திட்ட கருத்துரு ரூ.58.03 கோடிக்கு தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பணிக்காகும் மதிப்பீட்டுத் தொகையினை PDGF திட்ட நிதியிலிருந்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.13413/2019/குவ1, நாள்.20.06.2019ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

கரூர், இனாம் கரூர் மற்றும் தாந்தோணி பகுதிகளுக்கு குடிநீர் அபிவிருத்தி திட்டம் மேற்கொள்ளப்பட்டதுபோல் சணப்பிரட்டி பகுதிகளுக்கும் கூடுதல் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி பகுதிக்கு கூடுதல் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட கருத்துரு தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்ட M/S.VITYA CONSULTANCY PVT LTD., Secundrabad அவர்களுக்கு ரூ.58.03 கோடி வழங்க உரிய நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம். (இ1/4618/2021)

தீர்மானம் எண். 454 அனுமதிக்கப்பட்டது.

6)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம் கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும்.

தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

மேலும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021– 2022–ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட நிதி நிலை அறிக்கையில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பொதுமக்கள் அத்தியாவசிய தேவைக்காக தெருவிளக்கு வசதி தேவைப்படும் இடங்களில் புதிய LED தெருவிளக்குகள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 14000/2021/இ1 நாள். 09.09.2021–ல் மாநகராட்சி / நகராட்சிகளில் தேவைப்படும் இடங்களில் புதிய LED தெருவிளக்குகள் அமைப்பது மற்றும் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைப்பது தொடர்பாக விரிவான திட்ட கருத்துருவினை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் படி கரூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தேவையான இடங்களில் 277 புதிய LED தெருவிளக்குகள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள8737 தெருவிளக்குகளை LED தெருவிளக்குகளாக மாற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 600.00 லட்சத்திற்கு விரிவான திட்ட கருத்துரு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்காணும் விபரப்படி 277 புதிய LED தெருவிளக்குகளும் மற்றும் ஏற்கனவே உள்ள 8737தெருவிளக்குகளை LED தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு அரசு நிதியின் கீழ் மானியமாக நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு திட்ட அறிக்கையினை நகராட்சிநிர்வாகஇயக்குநர்,சென்னைஅவர்களுக்குஅனுப்பலாம்.

(இ1/8366/2021)

தீர்மானம் எண். 455 அனுமதிக்கப்பட்டது.

7) கரூர் நகராட்சி பகுதியில் புகளூர் சாலை முதல் தேசிய நெடுஞ்சாலை எண்.7 வரை 40 அடி அகல இணைப்பு சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் இனாம் கரூர் கிராமம் புல எண்.331/4 அரசு புறம்போக்கு வாரி என வகைப்பாடு செய்யப்பட்ட இடத்தில் நகராட்சி மூலம் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைப்பெற்று வரும் நிலையில் இதனை எதிர்த்து வாதி திரு.என்.நித்தியகுமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P(MD)No.14328/2020–ல் மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர் அவர்களை 1வது பிரதிவாதியாகவும், மாவட்ட வருவாய் அலுவலர் கரூர் அவர்களை 2வது பிரதிவாதியாகவும் மற்றும் ஆணையாளர் கரூர் நகராட்சி அவர்களை 3வது பிரதிவாதியாகவும் சேர்த்து தொடரப்பட்ட வழக்கின் முக்கியத்துவத்தை கருதி Thiru.K.Chellapandian, ADDL.ADVOCATE GENERAL-III OF TAMILNADU ஆஜராகி வழக்கு நடத்தப்பட்டது. மேற்படி வழக்கில் ஆஜராகி வழக்கு நடத்தியதற்கு கட்டணம் ரூ.60,000/– வழங்குமாறு Thiru.K.Chellapandian, ADDL.ADVOCATE GENERAL-III OF TAMILNADU அவர்களின் ROC.F.B.No.630-1/2020/AAG-III, நாள்.22.01.2021 –ல் கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

எனவே மேற்படி வழக்கின் முக்கியத்துவத்தை கருதி அரசு சார்பாக Thiru.K.Chellapandian, ADDL.ADVOCATE GENERAL-III OF TAMILNADU அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கு நடத்தப்பட்டு 22.01.2021–ல் தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி வழக்கிற்கு வழக்காடு கட்டணம் ரூ.60000/–னை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம். (எப்5/6963/2017)

தீர்மானம் எண். 456 அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 பழனியப்பா தெருவில் உள்ள மண்சாலை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்காணும் மண் சாலையில் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகுந்த சிரமமாக இருப்பதால், மேற்படி சாலையினை தார் சாலையாக மாற்றி அமைத்து தருமாறு அங்குள்ள பொதுமக்கள் மனு அளிக்கப்பட்டுள்ளது. ஆதலால் மேற்படி சாலையினை தார் சாலையாக மாற்றி அமைக்கும்

பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:—

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/8275/2021)

தீர்மானம் எண். 457 அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதிகளுக்கு புதிய குடிநீர் திட்டத்தில் பொன்நகர் சம்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள Gas Chlorination மூலம் பாதுகாப்பான குடிநீர் விநியோகப்பட்டு வருகிறது. Gas refill செய்ய வேண்டியுள்ளதால் மேலும் பாலம்மாள்புரம் பூஸ்டர் பொன்நகர் பூஸ்டர் பகுதிகளுக்கு குளோரினேசன் செய்யும் பணிக்காக Gas refill செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரு.3.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்குவேண்டப்படுகிறது.

அ.கு:—

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 லட்சத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ3/7709/2021)

தீர்மானம் எண். 458 அனுமதிக்கப்பட்டது.

10)கரூர் நகராட்சிக்குட்பட்ட 9சணப்பிரட்டி பகுதி வார்டு எண்.33 முதல் 36 வரையுள்ள வடக்கு காந்திகிராமம் ராஜா நகர் 5வது கிராஸ், ஜெ ஜெ நகர் ஆகிய பகுதிகளில் சிறு பாலங்கள் பழுதடைந்து பொதுமக்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதால் பழுதடைந்த சிறு பாலங்களை செப்பனிடுதல் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4.95 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். ( இ1/7171 /2021)

தீர்மானம் எண். 459 அனுமதிக்கப்பட்டது.

11)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 முதல் 32 வரை உள்ள பகுதிகளில் நெரூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பாலம்மாள்புரம் நீருந்து நிலையத்திற்கு குடிநீர் பம்பிங் செய்யப்பட்டுள்ளது. பாலாம்மாள்புரம் நீருந்து நிலையத்திலிருந்து வார்டு எண்.15 முதல் 32 வரை உள்ள பொதுமக்களுக்கு சுகாதாரமான குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. நெரூர் முதல் பாலாம்மாள்புரம் நீருந்து நிலையம் வரை உள்ள பம்பிங் மெயின் லைன் மற்றும் வார்டு 15 முதல் 32 வரை உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் கசிவுகள் சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். ( இ2/8180 /2021)

தீர்மானம் எண். 460 அனுமதிக்கப்பட்டது.

12)நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.16341/2021/இ3, நாள்.26.08.2021 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொலி காட்சி ஆய்வுக்கூட்டம் நாள்.01.09.2021ல் தெரிவித்துள்ளதற்கிணங்க கரூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள தார்சாலை, சிமெண்ட் சாலை மற்றும் இதர

சாலைகளை நேரில் சென்று சாலையின் நீளம், அகலம் அளவீடு செய்து பணியினை விரைந்து முடிப்பதற்காக RODO METER 8 எண்ணம் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.30,320/– ற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.30,320/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/8176/2021

தீர்மானம் எண். 461 அனுமதிக்கப்பட்டது.

13)கரூர் நகராட்சி வார்டு எண்.1,2,10,11,12 மற்றும் 13 பகுதிகளில் பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு முதல் முறையாக 20.07.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 9.50லட்சம்**</u>

1. Shanmuga Electricals & Engineering, Karur மதிப்பீட்டை விட 0.33% சதம் குறைவு
2. Saravana Electricals & Rewinding works, Karur , மதிப்பீட்டை விட 0.88% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 60, நாள். 29.01.2021ம் தேதி ரூ.9.50 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு முதன் முறையாக வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Shanmuga Electricals & Engineering, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ2/ 7233 /2020)

தீர்மானம் எண். 462 அனுமதிக்கப்பட்டது.

14)கரூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான Hundai-110 வாகனத்திற்கு பராமரிப்பு பணிகளான ஆயில் சர்வீஸ் செய்ய தயாரிப்பு நிறுவனத்தின் அரசுஅங்கீகாரம் பெற்ற பணிமனை Bharath Diesels, Karur நிறுவனம் ரூ.10746/– மற்றும் (Labour Charges)தொழிலாளர் கட்டணத் தொகை ரூ1770/– ஆக மொத்தம் ரூ.12516/–க்கு மதீப்பீட்டுப் பட்டியல் வழங்கியுள்ளது, மேற்படி மதீப்பீட்டுப் பட்டியல் உள்ளவாறு Hundai-110 வாகனத்திற்கு பராமரிப்பு பணிகளான ஆயில் சர்வீஸ் செய்து கொள்ள மேற்படி நிறுனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் செலவினம் செய்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1)மன்றம் அனுமதிக்லாம்.

2) கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான Hundai-110 வாகனத்திற்கு பராமரிப்பு பணிகளான ஆயில் சர்வீஸ் செய்ய வாகனதயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை Bharath Diesels, Karur நிறுவனத்தின் மூலம் பழுது பணிகள் செய்துக் கொள்வதற்கு செலவினத்தொகைரூ.12516/–க்கு நகராட்சி பொதுநிதியில் செலவினம் செய்துக் கொள்ளமன்றம் அனுமதிக்லாம். (எச்5/ 5185/2021/எச்5)

தீர்மானம் எண். 463 அனுமதிக்கப்பட்டது.

15)கரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பிரிவுக்கு சொந்தமானTN47 AH8815Open Body Tipper Lorry வாகனத்திற்கு பிரேக் பூஸ்டர் மாற்றி அமைக்கும் பணிகள் செய்ய தயாரிப்பு நிறுவனத்தின் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைJailaxmi Auto Works & Agencies Private Limited, Karur நிறுவனம் ரூ.13493/– மதீப்பீட்டுப் பட்டியல் வழங்கியுள்ளது, மேற்படி மதீப்பீட்டுப் பட்டியல் உள்ளவாறு TN47 AH8815 Open Body Tipper Lorry வாகனத்திற்கு பிரேக் பூஸ்டர் மாற்றி அமைக்கும் பணிகள் செய்து கொள்ள மேற்படி நிறுனத்திற்குவேலைஉத்திரவுவழங்கி இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் செலவினம் செய்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1)மன்றம் அனுமதிக்லாம்.
2)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமானTN47 AH8815Open Body Tipper Lorry வாகனத்திற்கு பிரேக் பூஸ்டர் மாற்றி அமைக்கும் பணிகள் செய்ய வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனைJailaxmi Auto Works &Agencies Private Limited, Karur நிறுவனத்தின் மூலம் பழுது பணிகள் செய்துக் கொள்வதற்கு செலவினத் தொகைரூ.13493/–க்கு நகராட்சி பொது நிதியில் செலவினம் செய்துக் கொள்ள மன்றம் அனுமதிக்லாம்.

தீர்மானம் எண். 464 அனுமதிக்கப்பட்டது.

16)தலைமை செயலர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை,அவர்களின் கடிதம் ந.க.எண் 27/P/2021, நாள்: 07.09.2021 தேதியிட்ட கடிதத்தில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் பணியாக கொரோனா தடுப்பு ஊசி செலுத்துவதற்கு 12.09.2021–ல் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் அமைத்து கொரோனா தடுப்பு ஊசி செலுத்தாத பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அனைவருக்கும் கொரொனா தடுப்பு ஊசி செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர் அவர்களின் 8.09.2021 தேதியில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் நகர பகுதிகளில் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம்கள்அமைக்க இடங்களை தேர்வு செய்து பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி குறைந்தது 10000 தடுப்பூசி செலுத்த அனைத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு அனைத்து வாக்கு சாவடி மையங்களில் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் 12.09.2021 முதல் வாரவாரம் நடைபெறவுள்ளதற்கு தேவையான பணியாளர்களுக்கு காலை,மதியம் ஆக இரு வேளை உணவு மற்றும் தேநீர் வழங்குவதற்கும், மருந்துகள் கொண்டு செல்லும் ஆட்டோ வாகன வாடகை மற்றும் பொதுமக்கள்அறியும் வகையில் விளம்பர பதாகைகள் வைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படிபணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மாநிலபேரிடர் மேலாண்மை திட்டத்தின் நிதியின் (SDRF)கீழ் மற்றும் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கலாம். (எச்1/8550/2021)

தீர்மானம் எண். 465 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி

# கரூர் நகராட்சி
# கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு செப்டம்பர் 24ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.15மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திரு.சு.இராமமூர்த்தி அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

**1)**கரூர் நகராட்சிக்கு உட்பட்ட கரூர் நகர காவல் நிலையம், வெங்கமேடு காவல் நிலையம், பசுபதிபாளையம் காவல் நிலையம் ஆகிய பகுதிகளில் உரிமம் கோரப்படாத வாகனமும் மற்றும் விதி எண். 102 கிரிமினல் குற்றம் சார்ந்த வழக்குகளுக்குட்பட்ட 182 வாகனங்களை எடுத்து செல்லும் வகையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 21.09.2021–ம் தேதி நடைபெற்றது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் நான்கு நபர்கள் கலந்து கொண்டார்கள். பொது ஏலத்தில் 18 நபர்கள் கலந்து கொண்டார்கள். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் ஸ்ரீ ராகவேந்திரா ஸ்டீல்ஸ் கரூர் அவர்கள் உயர்ந்த பட்ச ஏலத் தொகையாக ரூ.2,07,000/– கோரியுள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பொது ஏலத்தில் உயர்ந்த பட்ச ஏலத் தொகையாக ரூ.2,07,000/– ஐ ஸ்ரீ ராகவேந்திரா ஸ்டீல்ஸ் கரூர் அவர்கள் கோரியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி ஏலத்தில் கலந்து கொள்வதற்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகை ரூ.10,000/– ஈடு செய்து கொள்ளுமாறும் மீதமுள்ள ஏலத் தொகை ரூ. 1,97,000/– மற்றும் ஜி.எஸ்.டி தொகை ரூ.37260/– ஐ 21.09.2021 அன்று நகராட்சி கருவூலகத்தில் செலுத்தியுள்ளதால் ஸ்ரீராகவேந்திரா ஸ்டீல்ஸ் கரூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 466 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகர காவல் நிலையம், வெங்கமேடு காவல் நிலையம் , பசுபதிபாளையம் காவல் நிலையம் ஆகிய பகுதிகளில் உரிமம் கோரப்படாதவர்களின் வாகனமும் மற்றும் விதி எண்.102 கிரிமினல் குற்றம் சார்ந்த வழக்குகளுக்கு உட்பட்ட 180 இருசக்கர வாகனங்கள், 2 மூன்று சக்கர வாகனங்கள், 1 நான்கு சக்கர வாகனங்கள் என்று மொத்தம் 183 இந்த வாகனங்களுக்கு உரிய உரிமைதாரார்கள் அந்தந்த காவல் ஆய்வாளர் நிலையங்களில் சென்று தகுந்த ஆவணங்களை அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 14.08.2021 ம் தேதி அன்று தினத்தந்தி நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ. 7308 /–ஐ The Daily Thanthi நாளிதழ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.7308 /– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளமன்றம்அனுமதிக்கலாம். (இ1/6441/2021)

தீர்மானம் எண். 467 அனுமதிக்கப்பட்டது.

3) கரூர் நகர காவல் நிலையம், வெங்கமேடு காவல் நிலையம் , பசுபதிபாளையம் காவல் நிலையம் ஆகிய பகுதிகளில் உரிமம் கோரப்படாதவர்களின் வாகனமும் மற்றும் விதி எண்.102 கிரிமினல் குற்றம் சார்ந்த வழக்குகளுக்கு உட்பட்ட 180 இருசக்கர வாகனங்கள், 2 மூன்று சக்கர வாகனங்கள், 1 நான்கு சக்கர வாகனங்கள் என்று மொத்தம் 183 இந்த வாகனங்களுக்கு உரிய உரிமைதாரார்கள் அந்தந்த காவல் ஆய்வாளர் நிலையங்களில் சென்று தகுந்த ஆவணங்களை காண்பித்து பெற்றுக்கொள்ளும் அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 14.08.2021 ம் தேதி அன்று மக்கள் குரல் நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ. 6317 /–ஐ மக்கள் குரல் நாளிதழ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.6317 /– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/6441/2021)

தீர்மானம் எண். 468 அனுமதிக்கப்பட்டது.

4)கரூர் அரசு மருத்துமனையில் மின்விசிறி 15 எண்ணிக்கை, மின் பணிகள், மின் உபகரணங்கள் மற்றும் நோயாளிகள் குடிப்பதற்கு ஏற்கனவே உள்ள இரண்டு RO System பழுது நீக்கம் செய்யும் பணியினை **ரூ.0.45 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தேர்தல் பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சிசட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா டிரேடர்ஸ், **கரூர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. 44169 /-இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை % சதவிகிதத்தில் ரூ. |
|---|---|---|
| 1) | ஸ்ரீ கிருஷ்ணா டிரேடர்ஸ், கரூர் | 0.33% குறைவு |
| 2) | திரு.பி.நல்லுசாமி, கரூர் | 2.62 %அதிகம் |
| 3) | RPS Construction, Karur | 2.94% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ1/5278/2021)

தீர்மானம் எண். 469 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான Robot இயந்திரவாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமணை Surya Bala Earth Movers. Namakkal நிறுவனம் ரூ.1,20,000/– விலைப்புள்ளி வழங்கியுள்ளது, மேற்படி விலைப்புள்ளியில் உள்ளவாறு Robo t இயந்திர வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்து கொள்ள மேற்படி நிறுனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்லாம்.

2. கரூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான Robot இயந்திர வாகனத்திற்கு பராமரிப்பு பணிகளான ஆயில் சர்வீஸ் செய்ய வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமணை Surya Bala Earth Movers. Namakkal நிறுவனத்தின் மூலம் பழுது பணிகள் செய்துக் கொள்வதற்கு செலவினத்தொகை ரூ.1,20,000/–க்கு நகராட்சி பொதுநிதியில் செலவினம் செய்துக் கொள்ள மன்றம் அனுமதிக்லாம். (இ1/7750/2021)

தீர்மானம் எண். 470 அனுமதிக்கப்பட்டது.

**6)**கரூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் அனைத்து பொதுகழிப்பிடங்கள் மற்றும் பேருந்து நிலையம், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிருமி நீக்கம் செய்யப் பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகளான பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள் மற்றும் பினாயில் ஆகியவை மிககுறைந்த அளவே இருப்பில் உள்ளது. எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலத்தில் தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்க கீழ்க்கண்ட பொருட்களை வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர்கள் **22.09.2021**–ம் தேதி தனது குறிப்பில் கோரியுள்ளனர். எனவே **2021–2022**–ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட பொருட்களை வாங்குவதற்கு உத்தேசசெலவினம் ரூ.**6.00** லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | தேவையானபொருட்களின் விவரம் | தேவையானஅளவு |
|---|---|---|
| 1) | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 20 மெட்ரிக் டன் |
| 2) | பிளிச்சிங் பவுடர் | 5 மெட்ரிக் டன் |
| 3) | பினாயில் | 1000 லிட்டர் |

<u>அலுவலக குறிப்பு,</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி செலவினத்தொகை ரூ.**6.00**லட்சத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்.1/8933/2021)

தீர்மானம் எண். 471 அனுமதிக்கப்பட்டது.

**7)**கரூர் நகராட்சிக்குட்பட்ட நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தியிலிருந்து உறிஞ்சி கிணறுகளில் நீராதாரம் உயரும் வகையில் கொஞ்சமாக சென்று கொண்டிருந்கும் ஆற்று நீரை சுமார் **3.50** கி.மீ மேற்கு பகுதியிலிருந்து **210** எடையுள்ள Hitachi கொண்டு கால்வாய் அமைக்கும் பணியினை **ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தேர்தல் பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சிசட்டம் **15**ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா டிரேடர்ஸ், கரூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. **198974** /-இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை % சதவிகிதத்தில் ரூ. |
|---|---|---|
| 1) | ஸ்ரீ கிருஷ்ணா டிரேடர்ஸ், கரூர் | 0.24% குறைவு |
| 2) | திரு.ஆர்.தங்கவேல், கரூர் | 0.24 %அதிகம் |
| 3) | RPS Construction, Karur | 1.46% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(இ3/5279/2021)

தீர்மானம் எண். 472 அனுமதிக்கப்பட்டது.

**8)**கரூர் நகராட்சி இனாம் கரூர் பகுதிக்கு குடிநீர் தலைமை நீரேற்றும் நிலையம் காவிரி ஆற்றில் Hitachi இயந்திரம் கொண்டு ஆற்று நீரை தலைமை நீரேற்றும் அருகில் கொண்டு வரும்பணியினை **ரூ.2.90 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தேர்தல் பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சிசட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா டிரேடர்ஸ், கரூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.2,89,200/-இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை % சதவிகிதத்தில் ரூ. |
|---|---|---|
| 1) | ஸ்ரீ கிருஷ்ணா டிரேடர்ஸ், கரூர் | 0.24% குறைவு |
| 2) | திரு.ஆர்.தங்கவேல், கரூர் | 0.24 %அதிகம் |
| 3) | RPS Construction, Karur | 1.46% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

இ3/5280/2021

தீர்மானம் எண். 473 பதிவு செய்யப்பட்டது.

**9)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட குடிநீர் உபநீருந்து நிலையத்தில் பொன் நகர், மூலக்காட்டானூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் மின்மோட்டார்கள் 20HP/25HP மற்றும் ஸ்டாடர்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.70 இலட்சத்திற்கு அனுமதிக்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ . 1.70 இலட்சத்திற்கு இந் நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (8584/2021/இ3)

தீர்மானம் எண். 474 அனுமதிக்கப்பட்டது.

**10).**கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான பசுபதீஸ்வரா பெண்கள் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் உள்ள கீழ்புற பழைய கட்டிடம் PET அறை முன்புறம் உள்ள மின்இணைப்பு எண். 214—க்கு உரிய மீட்டர் பலகை மற்றும் உயர் மின் உதிரி பொருட்கள் அனைத்தும் புகைந்து விட்ட படியால் மாணவ மாணவியர் நலன் கருதி எவ்வித பாதிப்பு ஏற்படாதவாறு உடனே பழுது நீக்கம் செய்யுமாறு ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் படி பழுது நீக்கம் செய்ய தளவாட பொருட்கள் வாங்கி பொருத்தும் பணி மேற்கொண்டு பழுது நீக்கம் செய்தமைக்கு Sri Ramdev Electricals .கரூர் அவர்களிடம் இருந்து வரப்பெற்ற பில் பட்டியல் தொகை ரூ. 5227/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணி மேற்கொண்டமைக்கு Sri.Ramdev Elecricals.கரூர் அவர்களிடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 5227/—ஐ இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். (8582/2021/இ3)

தீர்மானம் எண். 475 அனுமதிக்கப்பட்டது.

11)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வாங்கப்பாளையம் உபநீருந்து நிலையம், குளத்துப்பாளையம் உபநீருந்து நிலையம் ஆகிய இடங்களில் வந்த 60HP SPLIT Casing Motor மற்றும் 20HP Submersible motor பம்பிங்ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோகம் தடைபடாமல்இருக்க பழுது பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.75 இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். ( 8583/2021/இ3)

தீர்மானம் எண். 476 அனுமதிக்கப்பட்டது.

12). கரூர் நகராட்சிக்குட்பட்ட அரசு காலனியில் உள்ள திடக்கழிவு மேலாண்மை திட்ட உரக் கிடங்கில் இயங்கி வரும் Bio Gas Methnation Plant –யை இயக்குவதற்கான இசைவு சான்றினை 2021– 2022 ஆண்டிற்கு புதுப்பிப்பதற்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்தில் இருந்து வரப்பெற்ற கடித எண். FKAR/1303/RS/DEE/Trvpcb/kar /2021 நாள். 15.09.2021 கடிதத்தின் படி 2021– 2022 நடப்பு ஆண்டிற்கு உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பின் படி ரூ. 65200/– District Environmental Engineer Tamilnadu pollution control Board-க்கு வழங்க மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் கரூர் அவர்களின் கடிதத்தின் படி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1).மன்றம் அனுமதிக்கலாம்

2). மேற்படி Bio Gas Methanation plant –ஐ இயக்குவதற்கான இசைவு சான்றினைப் புதுப்பிப்பதற்கான தொகை ரூ. 65200/– District Environent Engineer TamilNadu Pollution control Board -க்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம். ( 4671/2012/இ5)

தீர்மானம் எண். 477 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி